




# திராவிட மாடல் அரசு

99

# விழுதுகள் திட்டம்!

## உயர்வுபெறும் மாற்றுத் திறனாளிகள்

**பன்னீர் பெருமாள்**

**‘முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்’ என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சியை முன்னோக்கிக் கொண்டு செல்லும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார், நமது முதலமைச்சர். உள்ளடக்கிய வளர்ச்சியைக் கொண்ட அந்தத் திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி....**

முத்தமிழறிஞர் கலைஞர் வழியில் **‘எல்லோருக்கும் எல்லாம்’** என ஆட்சிபுரிந்து வருகிறது, நம் திராவிட மாடல் அரசு. அதை மெய்ப்பிக்கும் திட்டங்களின் வரிசையில், அரசின் சாதனைத் திட்டமாக உருப்பெற்றுள்ளது மாற்றுத் திறனாளிகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் **‘விழுதுகள் திட்டம்’**.

மாற்றுத்திறனாளிகளுக்கு மாதாந்திர பராமரிப்பு உதவித்தொகை, மாற்றுத் திறனாளி மாணவர்களுக்கான கல்வி உதவித்தொகை, நவீன உபகரணங்கள், பயணக் கட்டணச் சலுகை என பல்வேறு நலத் திட்டங்களை, அரசு ஏற்கெனவே செயல்படுத்தி வருகிறது.

### ஒருங்கிணைந்த சேவைகள்

மாற்றுத் திறனாளிகள் நலத்துறையில் இருந்து, ‘தமிழ்நாட்டு உரிமைகள்’ என்கிற திட்டம் ஏற்கெனவே செயல்படுத்தப்பட்டு வருகிறது. உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வரும், இந்த உரிமைத் திட்டத்தின் கீழ் மாற்றுத்திறனாளிகளுக்கு ஒருங்கிணைந்த சேவைகளை அளிப்பதற்கான மையங்கள், ‘விழுதுகள் திட்டத்தின்’ கீழ் தமிழ்நாடு முழுவதும் 273 இடங்களில் அமைக்கப்படவுள்ளன. அதன் முதல் மையத்தை சென்னையில், சமூக ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் முன்னேற விழையும் கண்ணகி நகரில் உருவாக்கியுள்ளது தமிழ்நாடு அரசு.

மாற்றுத் திறனாளிகள் எளிதாக அணுகி சேவை பெறும் வகையில், இந்த மையத்தில் வசதிகள் செய்யப்படுகின்றன. குறிப்பாக, மாற்றுத் திறனாளிகள் காப்பகங்களிலும், மறுவாழ்வு சேவைக்கென வடிவமைக்கப்பட்ட ஊர்திகளிலும் ஒருங்கிணைந்த சேவைகள் கிடைக்கும்.

இந்த ஒருங்கிணைந்த சேவை மையம், முதன்முறையாக மாற்றுத் திறனாளிகளின் உடல் மற்றும் மனம் தொடர்பான நாள்பட்ட மறுவாழ்வுத் தேவைகளை நிறைவேற்றும். குறிப்பாக, மாற்றுத் திறனாளிகளுக்கான சிறப்புக்கல்வி, கண்பார்வை அளவியல், கேட்டல் மற்றும் பேச்சுப்பயிற்சி, இயன்முறை, செயல்முறை மற்றும் உளவியல் ஆகிய ஆறு மறுவாழ்வுச் சேவைகள் அனைத்தும் ஒரே இடத்தில் வழங்கும். இந்த சேவைகளை வழங்க வல்லுநர்களும் இந்த மையத்தில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

### அவசர உதவி கோரலாம்

இந்த மையத்தில் அமைந்துள்ள கழிப்பறைகளைப் பயன்படுத்தும் மாற்றுத் திறனாளிகளுக்கு அவசர உதவி தேவைப்படுமாயின், அங்கு வைக்கப்பட்டுள்ள அழைப்பானை (BUZZER) அழுத்தி அவசர உதவி கோரலாம். முக்கியமாக மாற்றுத் திறனாளிகளின் அவசரத் தேவைக்குத் தொலைநிலை தொழில்நுட்பம் ( IOT ) வழி உதவும் வகையிலான வசதிகளும் அமைக்கப்பட்டுள்ளன. இந்தியாவிலேயே இப்படியான தொழில்நுட்பம் அமைக்கப்பட்ட முதல் மாற்றுத் திறனாளிகள் மையமாக விழுதுகள் மையம் அமைந்துள்ளது.

தரமான கட்டடங்களுக்கான ஒன்றிய அரசின் வழிகாட்டுதல்கள் கடைபிடிக்கப்பட்ட கட்டடமாக இந்த மையம் அமைந்துள்ளது. அதற்காக ரூ.3.08 கோடியில் சீரமைக்கப் பட்டுள்ளது.

### மறுவாழ்வு சேவை ஊர்தி

‘விழுதுகள் திட்ட’த்தின் தொடர்ச்சியாக, 05.12.2024 அன்று மாற்றுத் திறனாளிகள் நலத்துறையின் சார்பில் தலைமைச் செயலகத்தில் ‘விழுதுகள் மறுவாழ்வுச் சேவை ஊர்தி’யை முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்.



**புறவுலகச் சிந்தனை அற்றவர்களுக்கான ஒப்புயர்வு சேவை மையம்.**

சென்னை, கே.கே.நகரில் உள்ள அரசுப் புனர்வாழ்வு மையம் மருத்துவமனை வளாகத்தில், புறவுலகச் சிந்தனையற்ற நபர்களுக்கான ஒப்புயர்வுச் சேவைகளை வழங்கும் மையம் (Centre of excellence for person with autism spectrum disorder) உருவாக்கப்பட்டுள்ளது. 15 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள இந்த மையத்தையும் முதலமைச்சர் தொடங்கி வைத்துள்ளார்.

புறவுலகச் சிந்தனையற்றோரைக் கண்டறிதல், மதிப்பீடு செய்தல், அவர்களுக்கான சிறப்புக் கல்வி வழங்குதல், கேட்டல் மற்றும் பேச்சுப் பயிற்சி வழங்குதல், இயன்முறை / செயல்முறைச் சேவைகள், பகல்நேர பராமரிப்புச் சேவைகள் இங்கு அளிக்கப்படும்.

தொழில் சார்ந்த பயிற்சி மற்றும் உளவியல் போன்ற சேவைகளை அவர்களுக்கும், அவர்களின் பெற்றோர்களுக்கும் பல்துறை வல்லுநர்கள் மூலமாக இந்த மையம் வழங்கும்.

**கிடைக்கும் வசதிகள்**

- மாற்றுத் திறனாளிகளுக்கான வசதிகள் ஒரே இடத்தில் கிடைக்கும்.
- தொலைநிலை வழி அவசர உதவிகள் செய்யும் ஏற்பாடுகள்.
- மாற்றுத் திறனாளிகள் தங்கும் இல்லத்தில் நவீன வசதிகள்.
- கண்காணிப்பு கேமரா மூலம் கண்காணிப்பு.
- எளிதாக அணுகும் வகையிலான கட்டடங்கள், வசதிகள்.



**‘விழுதுகள் திட்ட’த்தின் மூலம் மாற்றுத் திறனாளிகளுக்கான சேவைகள் ஒருங்கிணைந்த வகையில் கிடைப்பதால் புதிய வடிவம் எட்டப்பட்டுள்ளது. அதன்மூலம் புதிய உயரத்தையும் எட்டியுள்ளது, திராவிட மாடல் ஆட்சி.**

இந்த வாகனங்கள், ’விழுதுகள் ஒருங்கிணைந்த சேவை மைய’த்துக்கு நேரடியாக வர முடியாத மாற்றுத் திறனாளிகளுக்கான சேவைகளை நேரடியாக அவர்களின் இடங்களுக்குக் கொண்டு செல்லும். இந்த வாகனம் திட்டமிட்ட வழித்தடங்களில் சென்று, அந்த வழியில் உள்ள மாற்றுத் திறனாளிகளுக்குத் தேவைகளுக்கு ஏற்ப, இயன்முறை, கேட்டல் மற்றும் பேச்சுப் பயிற்சி, சிறப்புக் கல்வி ஆகிய மறுவாழ்வுச் சேவைகளை வழங்கும்.

இந்த வாகன சேவையைத் தொடங்கி வைத்த அன்றே, ‘விழுதுகள் திட்ட’த்தை வலுப்படுத்தும் வகையில், புதிய அறிவிப்பையும் முதலமைச்சர் வெளியிட்டார். குறிப்பாக, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் கீழ் இயங்கும் 35 ஆரம்ப நிலை இடையீட்டு மையங்கள், மாற்றுத் திறனாளிகள் நலத்துறையின் தமிழ்நாடு உரிமைகள் திட்ட’த்தின் மூலம் விழுதுகள், ஒருங்கிணைந்த சேவை மையங்களாகச் செயல்படுத்தப்படும் என்றும் அறிவித்தார். இந்த அறிவிப்பும் மாற்றுத்திறனாளிகள் தங்களின் சேவைகளை விரைந்து பெறுவதற்கு வழி ஏற்படுத்தியுள்ளது.

‘விழுதுகள் திட்ட’த்தின் மூலம் மாற்றுத் திறனாளிகளுக்கான சேவைகள் ஒருங்கிணைந்த வகையில் கிடைப்பதால் புதிய வடிவம் எட்டப்பட்டுள்ளது. அதன்மூலம் புதிய உயரத்தையும் எட்டியுள்ளது, திராவிட மாடல் ஆட்சி.

**...சாதனை தொடரும்**

## மாற்றுத்திறன் மாணவியும் ஆசிரியர்களும்!

விழுப்புரம் மாவட்டத்தைச் சேர்ந்த ராஜரத்தினம் - பூங்கொடி என்பவரின் மகள் சுபஸ்ரீ. பேச்சு மற்றும் செவித்திறன் சவால் கொண்ட மாற்றுத் திறனாளியான இவர், விழுப்புரம் நகரில் பி.என்.தோப்பு நகராட்சி மேல்நிலைப் பள்ளியில் 12-ஆம் வகுப்பு படித்து வருகிறார்.

சிறு வயது முதலே தடகள விளையாட்டுகளில், ஆர்வம் கொண்ட இவரை ஆசிரியர்கள் ஊக்குவித்ததால், தேசிய அளவிலான ஓட்டப்பந்தயப் போட்டிகள் பலவற்றில் பதக்கம் வென்று சாதித்துள்ளார். இதன் தொடர்ச்சியாக சர்வதேச அளவிலான போட்டிகளில் பங்கேற்கும் வகையில், மலேசியாவில் உள்ள கோலாலம்பூரில் 05, 06-12-2024 ஆகிய நாட்களில் நடைபெற்ற 10-வது ‘சர்வதேச ஆசிய பசிபிக் செவித்திறன் சவால் உடையோர் தடகளப் போட்டி’யில், 4×400 மீட்டர் தொடர் ஓட்டப்பந்தயத்தில் தங்கப் பதக்கமும், 4×100 மீட்டர் தொடர் ஓட்ட பந்தயத்தில் வெள்ளிப் பதக்கமும் வென்று, இந்தியாவிற்கும் தமிழ்நாட்டிற்கும் பெருமை சேர்த்துள்ளார்.

அந்தப் பெருமைக்குப் பெருமை சேர்க்கும் வகையில், மாணவி சுபஸ்ரீயை ஆசிரியர்கள் வரவேற்று சிறப்பு செய்தனர். குறிப்பாக, சுபஸ்ரீயை வரவேற்கும் விதமாகப் பள்ளி ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் உற்சாக நடனமாடியும் மலர் தூவியும் வரவேற்றனர். குறிப்பாக, மாற்றுத்திறனாளி மாணவியின் சாதனையைக் கொண்டாடும் வகையில், ஆசிரியர்கள் ஆடிய நடனம் சமூக வலைத்தளங்களில் பெரிதும் கவனம் ஈர்த்தது. பொதுமக்களிடம் பாராட்டையும் பெற்றது. அந்த வரவேற்பில் நெகிழ்ந்தது, அந்த மாணவி மட்டுமல்ல, மக்களும்தான்.

## ஃப்ளாஷ்பேக்



**கழகமே எங்கள் குடும்பம்!**



வெ.சரண்யா

2012 -ஆம் ஆண்டு, விழுப்புரத்தில் கழக முப்பெரும் விழா பேச்சுப் போட்டியில் முதலிடம் பெற்று முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களிடம் பரிசுபெற்று மகிழ்ந்தேன். நான் புகுந்த வீடும் கழகக் குடும்பம். என் மாமனார் சேலம் மாவட்டம், அஸ்தம்பட்டி பகுதி விவசாய அணி அமைப்பாளராகவும் பின் 7-வது கோட்ட கழகச் செயலாளராகவும், எனது மாமியார் சேலம் மாநகரத் துணைச் செயலாளராகவும் செயல்பட்டவர்கள். இந்தப் படம், 2017-ஆம் ஆண்டு இன்றைய கழகத் தலைவர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சேலம் வந்திருந்தபோது, எனது திருமண அழைப்பிதழை வழங்க குடும்பத்துடன் சென்றபோது எடுக்கப்பட்டது. 2018-இல், என் மகளுக்கு செம்மொழி அரசி என தலைவர்தான் பெயர் சூட்டினார். பின்னர் என் மகனுக்கு செந்தமிழ் அரசு என இளைஞர் அணிச் செயலாளர் அவர்கள் பெயர் சூட்டினார். தற்போது நான் ‘என் உயிரினும் மேலான’ பேச்சுப் போட்டியில் தேர்வாகி கழகப் பேச்சாளராக வாய்ப்பு பெற்றேன். ‘கழகமே எங்கள் குடும்பம்’ என்று சொல்லிக் கொள்வதில் பெருமை அடைகிறேன்.

**- வெ.சரண்யா எம்.எஸ்.சி, எம்.ஃபில்.,**
**கழக இளம் சொற்பொழிவாளர், சேலம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473
மின்னஞ்சல் : youthwing@dmk.in

## கருவூலம்


### இந்தி ஆதிக்க எதிர்ப்பு மாநாடுகள்!

1963-இல் இந்தி ஆட்சிமொழி மசோதா நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டது. இதைக் கடுமையாக எதிர்த்த அண்ணா, பல வகையான போராட்ட வடிவங்களை வகுத்தார். குறிப்பாக, இந்தி ஆதிக்க எதிர்ப்பு மாநாடுகளை அறிவித்தார். ‘கொங்கு மண்டலம்’, ‘சோழ மண்டலம்’, ‘பாண்டி மண்டலம்’ எனப் பழந்தமிழ் நிலங்களின் பாணியில், அந்தந்த மண்டலங்களின் தலையாய ஊர்களில் இம்மாநாடுகள் நடத்தப்பட்டன.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

691

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131